**<u>செய்தி வெளியீடு எண் 299</u>** **<u>நாள் 29.8.2006</u>**

**<u>பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதி திட்டத்தின்கீழ்</u>**
**<u>நான்கு மறைந்த பத்திரிக்கையாளர் குடும்பங்களுக்கு</u>**

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதியுதவி</u>**

தமிழ்நாட்டிலுள்ள பத்திரிக்கைத் துறையினரின் நலன் கருதி, உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிக்கைத் துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், மற்றும் புகைப்படக்காரர்கள் – இவர்களில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், இயற்கை எய்துபவர்களுடைய குடும்பத்திற்கு பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின் மூலம், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிக்கையாளர்களுக்கும் 2001 முதல் 2006 வரை 9 பத்திரிக்கையாளர்களுக்கும் மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று (29.8.2006), பின்வரும் நான்கு மறைந்த பத்திரிக்கையாளர்களின் குடும்பங்களுக்கு இந்நிதியுதவியினை வழங்கினார்கள்

1. **<u>திரு எம்.எஸ். விஸ்வநாதன்</u>** (ஆனந்தவிகடன், கல்கி, தினமணிக்கதிர், குங்குமம் மற்றும் சாவி, பருவஇதழ்கள், சென்னை)

முதுபெரும் தமிழ் எழுத்தாளரும், பிரபல பத்திரிகை ஆசிரியருமான சாவி என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு விஸ்வநாதன் அவர்கள் 9.2.2001ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய துணைவியார் திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்கள், இத்துறைக்கு பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி 25–5–2006 அன்று விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம், பரிசீலிக்கப்பட்டு, சிறப்பு நிகழ்வாகக் கருதி, திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ், ரூபாய் 50,000/– வழங்க ஆணையிடப்பட்டது. இன்று (29.8.2006) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

2. **<u>திரு தி தேசிங்கு</u>** (வண்ணத்திரை வார இதழ், சென்னை)

6–11–2001 அன்று மறைந்த பத்திரிக்கையாளர் திரு தி. தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி தே. ஆர்த்தி அவர்கள், 15–3–2002 அன்று பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18–7–2006 அன்று ஆணையிட்டார்கள். இன்று

(29.8.2006) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருமதி தே. ஆர்த்தி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

3. **<u>திரு எம். இன்பராஜ்,</u>** (மாலை முரசு (நாளிதழ்) மதுரை.

28.8.2002 அன்று மறைந்த பத்திரிக்கையாளர் திரு எம். இன்பராஜ், அவர்களின் துணைவியார் திருமதி இ. வேல்தங்கம் அவர்கள், 29.10.2002 அன்று பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு பத்திரிக்கையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.7.2006 அன்று ஆணையிட்டார்கள். இன்று (29.8.2006) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருமதி இ,வேல்தங்கம் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

4. **<u>திரு எம். சுப்புக்குட்டி</u>** (தினகரன் நாளிதழ், திருச்சி):

13.4.2001 அன்று மறைந்த பத்திரிக்கையாளர் திரு எம். சுப்புக்குட்டி அவர்களின் துணைவியார் திருமதி சு. சுப்புலட்சுமி அவர்கள், 19.8.2001 அன்று பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பத்திரிக்கையாளர் குடும்ப உதவிநிதியாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்க 23.7.2006 அன்று ஆணையிட்டார்கள். இன்று (29.8.2006) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமதி சு. சுப்புலட்சுமி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை